| செயலாக்க அலுவலகம்: |
|---|
| |

# முக்கிய அறிவிப்பு

**(AsylG-ன் பிரிவு 22-ஐ தொடர்ந்து
செய் வழிமுறைகள், பத்தி 3)**

| | |
|---|---|
| குடும்ப பெயர்: | |
| முதல் பெயர்: | |
| பிறந்த தேதி: | |
| குடியுரிமை: | |

**கோப்பு எண்:**
(தயவுசெய்து குறிப்பிடவும்)

அன்புள்ள புகலிடம் கோருவோரே,

நீங்கள் ஜெர்மனியின் மத்திய குடியரசில் புகலிடம் கோரியுள்ளீர்கள். இவ்வாறு செய்வதால், நீங்கள் துன்புறுத்துதலிலிருந்து அல்லது ஒரு உடனடி கடுமையான ஆபத்திலிருந்து உங்களை பாதுகாக்க கோருகிறீர்கள் என்று எடுத்துக்கொள்ளப்படுகிறது.

நீங்கள் முறையாக உங்கள் புகலிட கோரிக்கை விண்ணப்பத்தை சமர்ப்பித்தால் மட்டுமே உங்கள் விண்ணப்பம் குறித்து ஆராயப்படுவதோடு அதனை அங்கீகரிக்க பரிசீலனையும் செய்யப்படும். இந்த விண்ணப்பத்தை குடிபெயர்வு மற்றும் அகதிகளுக்கான மத்திய அலுவலகத்திற்குரிய கிளை அலுவலகத்திற்கு, நேரடியாக சென்று சமர்ப்பிக்க நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள். அப்பொழுதுதான் புகலிடம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உங்கள் புகலிட கோரிக்கை விண்ணப்பம் ஒரு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அதை நீங்களே நியாயப்படுத்தும் வாய்ப்பும் வழங்கப்படும்.

உங்கள் விண்ணப்பம் அங்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், நீங்கள் சேர்க்கை மையத்தின் மாவட்டத்திலேயே தங்கி புகலிடம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக, குடியிருப்பு அனுமதி வழங்கப்படும்.

நீங்கள் முதலில் சேர்க்கை மையத்திற்கு மாற்றப்படுவீர்கள். புகலிடம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது, தஞ்சம் கோருவோர்க்கு இது ஒரு இல்லமாக செயல்படுகிறது. சேர்க்கை மையத்தில், புகலிடம் கோரி விண்ணப்பிக்க வேண்டிய குடிபெயர்வு மற்றும் அகதிகளுக்கான மத்திய அலுவலகத்தின் கிளை அலுவலகம் பற்றி உங்களுக்கு தெரிவிக்கப்படும். எனவே, தயவுசெய்து பின்வரும் சேர்க்கை மையத்தை உடனடியாக தொடர்பு கொள்ளவும், சமீபத்திய நேரத்தில் .......................... .

சேர்க்கை மையம்: ..........................................................................................................

..........................................................................................................................................

**நீங்கள் இந்த கோரிக்கையில் இணங்கவில்லையெனில், உங்கள் புகலிடம் கோரும் விண்ணப்பம் திரும்பப் பெறப்படும் மற்றும் புகலிடம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது. பாதுகாப்புக்காக உங்கள் கோரிக்கையை ஆய்வு செய்ய மற்றொரு ஐரோப்பிய நாடு பொறுப்பு என்றால், அங்கு நீங்கள் மாற்றப்படுவீர்கள் என்று மத்திய அலுவலகம் முடிவு செய்யும். மேலே குறிப்பிடப்பட்ட உங்களுக்காக ஒதுக்கப்பட்ட சந்திப்பு நேரத்தில் நீங்கள் அலுவலகத்திற்கு நேரில் வராவிட்டால், இந்த முடிவு எடுக்கப்படும்.**

**நான் இந்த செய் வழிமுறையை இன்று பெற்றுக்கொண்டேன்.**

**இந்த செய் வழிமுறை இன்று ................................ க்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது மற்றும் நான் இதில் உள்ள விஷயத்தினை புரிந்துகொண்டேன்.**

| | |
|---|---|
| **.................................................** | **.........................................................................................................** |
| இடம்      தேதி | விண்ணப்பதாரர் / சட்டபூர்வ பிரதிநிதி கையொப்பம் |